**தும்பனே பிரதேச சபை - 2024**

-------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தும்பனே பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானம் மற்றும் செலவினக் கணக்கு மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தும்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும்

எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்.

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்.

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வலப்பனை பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடைத்து அகற்றப்பட்டிருந்த ரூபா 835,000 கூட்டுத் தொகையான 06 கட்டிடங்களின் பெறுமதியை காணி மற்றும் கட்டிடங்களில் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுடலைச் சாலை கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த சுடலை சாலை கொட்டில் மற்றும் சுடலைசாலை புகை கூடு என்பவற்றின் கூட்டுப் பெறுமதி ரூபா 613,664 தொகை இயந்திர உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்ப உபகரணங்களின் கீழும் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 613,664 தொகை தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கீடு செய்வதாக. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு காண்பிக்கப்பட்ட 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் பயன்பாட்டு பதிவேடுகளில் காணப்படும் மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 234,229 ஆன வேறுபாடு காணப்பட்டது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | கணக்கு மீதிகளை அட்டவணைகளுடன் இணங்கும் வகையில் சரி செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்படும் மொத்தம் ரூபா 511,289 ஆன கடன் கொடுத்தோர் மீது ஒன்று மற்றும் சொத்து மீது ஒன்றுக்குரிய பதிவேடுகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | சொத்து மீதிளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1946 இன் 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டுச் கட்டளைச் சட்டம்** | | | |
| | 20 ஆம் பிரிவு | வீதவரிக்கு ஆதனங்கள் மதிப்பீடு செய்தல் 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் மீளாய்வாண்டிற்காக வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | மீள் மதிப்பீடு எதிர்காலத்தில் மேற்கொள்ளவதாக. | உரிய காலத்தில் ஆதனங்கள் மதிப்பீடு செய்து வீதவரி அறவிடப்பட வேண்டும். |
| **(ஆ)** | **1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்** | | | |
| | 218 ஆம் பிரிவு | 1987 ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டு வரை காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதாக. | உரிய காலத்தில் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டு சொத்துக்களின் இருப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும. |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | | | |
| | நி.பி. 571(3) | 2015 முதல் 2020 | எதிர்காலத்தில் சரி | காலாவதியான |

| | | |
|---|---|---|
| வரையான காலப் பகுதிக்கரிய காலாவதியான ரூபா 1,545,798 ஆன காலாவதியான 59 வைப்புக்கள் தீர்வு செய்யப்படவில்லை. | செய்வதாக. | வைப்புக்கள் தீர்வு செய்யப்படுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 39,390,614 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய மீண்டெழும் வருமானம் ரூபா 26,534,929 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 8,646,200 | 8,782,302 | 9,111,826 | 2,353,789 | 6,544,000 | 8,075,007 | 8,539,675 | 2,683,313 |
| (ii) | வாடகை | 6,772,000 | 8,330,877 | 8,216,737 | 399,228 | 4,858,600 | 6,387,497 | 6,511,256 | 285,088 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 1,820,000 | 2,685,388 | 2,685,388 | - | 1,650,000 | 1,779,800 | 1,968,921 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 48,195,400 | 52,313,148 | 47,807,544 | 30,423,956 | 46,985,500 | 45,018,113 | 52,167,883 | 25,918,352 |
| | | 65,433,600 | 72,111,715 | 67,821,495 | 33,176,973 | 60,038,100 | 61,260,417 | 69,187,735 | 28,886,753 |

**2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

**சபையின் வருமன சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரி** | | |
| | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 847,119 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5,000 இணை மிகைத்த 9 அலகுகளில் ரூபா 107,964 ஆன நிலுவை இருந்தது. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் விரைவில் அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | **வாடகை**<br>ஹத்தரலியத்த வியாபார கடை தொகுதியில் 49 கடைகளுக்காக 2017 ஜனவரி 17 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதும் அதனை செயல்படுத்தாமல் 2015 ஆம் ஆண்டில் வருமான மதிப்பீட்டாளரின் தற்காலிக மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டு வரை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக 2017 பெப்ரவரி முதல் 2024 திசெம்பர் 31 வரை யான காலப்பகுதிக்குரிய மதிப்பீட்டு அறிக்கை செயல்படுத்தப்படாமை காரணமாக ரூபா 5,234,500 தொகை சபைக்கு கிடைக்காமல் போயிருந்தது. | விரைவில் ஆராய்ந்து அறிக்கை இடுவதாக. | மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அற விடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **அனுமதி பத்திரங்கள்**<br>1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 59 இன் பிரகாரம் வியாபாரம் மற்றும் நிர்மாணங்கள் தொடர்பாக முறையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் முறையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்வதாக. | குறித்த காலப்பகுதியில் கணிப்பீட்டினை மேற்கொண்டு அனுமதி பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். |
| **(ஈ)** | **ஏனைய வருமானம்**<br>முச்சக்கர வண்டி கட்டணங்கள்<br>2017 மே 5 ஆம் திகதிய 2017/42 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிரதேச சபை உபவிதி உறுப்புரையில் முச்சக்கர வண்டி நிறுத்தி வைத்தல் தொடர்பாக உப உறுப்புரையின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 34 நிறுத்துமிடங்களில் இருந்து ரூபா 687,850 ஆன நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சட்ட நடைமுறைகளை பின்பபற்றி அறவிடுவதாக. | முச்சக்கர வண்டி நிறுத்தல் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(உ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**<br>மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 27,738,920 ஆக இருந்தது. | நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டுகளில் மீண்டும் வருமானத்தை பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தாமல் ரூபா 62,481,422 தொகை நிலையான வைப்புகக்ளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | மிகை பணம் வைப்பாக முதலீடு செய்யப் பட்டுள்ளதாக. | மிகை பணத்தை பிரதேச அபிவிருத்திக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மத்திய மாகாண சபையின் கைத்தொழில் அமைச்சிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வழங்கப்பட்டிருந்த முன்னால் தலைவரால் பயன்படுத்திய மோட்டார் வாகனம் 2014 ஆம் ஆண்டின் போது தீப் பிடித்து விபத்திற்குட்பட்டிருந்ததுடன், இந்த வண்டியை உயிர்ப்பிபதற்கு மாத்திரம் செலவாகும் திருத்த செலவினம் ரூபா 1,009,400 என மோட்டார் போக்குவரத்து பொறியியலாளரால் சான்றிதலொன்ற வழங்கப்பட்டிருந்தது. இந்த விபத்து இடம்பெற்று 03 ஆண்டுகளின் பின்னர் நி.பி 104(4) பரிசோதனை மூலம் ரூபா 173,120 தொகை அறவிடப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அரசிற்கு ரூபா 836,280 நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. | நி.பி பரிசோதனை மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட பரிந்துரைகள் படி அறவிடப்படுவதாக. | இடம்பெற்ற நட்டம் சரியாக நிச்சயிக்கப்பட்டு பொறுப்பான தரப்பினரிடம் இருந்து அறவிடப்பட வேண்டும். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு பெற வேண்டிய 03 கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 1,996,112 ஆக இருந்ததுடன். 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் மொத்தம் ரூபா 2,181, 336தொகையாக இருந்தது. . | எதிர்காலத்தில் சீராக்கம் செய்வதாக. | பெற வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 84 பிரிவின் படி, 2021 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் கட்டிடத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்ட 336 | சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதாக. | குடியிருப்புக்கு பயன்படுத்தும் கட்டிடங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கட்டிடங்களுக்கு இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. | | வழங்கப்பட வேண்டும். |
| (இ) | 2006 ஆம் ஆண்டு ஏலத்தில் பிரிக்கப்பட்டு விற்கப்பட்ட புனித ஜோர்ஜ் தோட்டத்தில் அதிகாரம்புர மெதகொடவில் உள்ள காணியில் பொது நோக்கங்களுக்காக சபைக்கு ஒதுக்கப்பட்ட காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை. | அது எதிர்காலத்தில் மதிப்பிடப்படும் என்பதாக. | காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 11,998,250 கூட்டுப்பெறுமதியான 03 வாகனங்கள், 02 இயந்திரங்கள் மற்றும் 55 கனணி உதிரிப் பாகங்கள் என்பன 03 முதல் 09 ஆண்டுகள் இடைப்பட்ட காலமாக விளைவற்றும் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. | விளைவற்ற வாகனங்கள் தொடர்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக. | கைதவிர்ப்பதற்கு அல்லது திருத்தம் செய்து பயன்படுத்த வேண்டும். |

## 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணியினருடன் ஒப்பிடும் போது அதில் 09 பதவிகளில் 16 வெற்றிடங்களும் 3 பதவிகளில் 20 மிகைகளும் காணப்பட்டன. | தலைமைச் செயலாளர் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | வெற்றிடங்களை பூர்த்தி செய்து பொது மக்கள் சேவைகளை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

## 4.1 சுற்றாடல் சிக்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 (ஆ) பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் பிரதேசத்தின் வீடுகளிலிருந்து மலக் கழிவுகளை வெளியேற்றுவதற்காக முறையாக குழிகளை உரிய காலப் பகுதியில் சுத்திகரிப்பதற்கும் வெறுமையாக்கு வதற்கும் முடியுமான வகையில் கலிவண்டி சேவை ஒன்று நடத்திச் செல்லப்பட்டு இருக்க வில்லை. | பொருத்தமான இடமொன்று இல்லையென்பதாக. | சிக்கல்களை தீர்வு செய்து பொது மக்கள் தேவைப்பாடு நிறைவேறற்ப்பட வேண்டும். |

## 4.2 நிலைபேறான அபிவிருத்தி

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் ,லக்க நிலையான அபிவருத்திச் சட்டத்தின் விதிகளின் படி, சபையால் நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் இலக்குகளை அடையாளம் கண்டிருந்த போதிலும், அவற்றை அடைய நடவடிக்கை எடுக்கவில்லை. | நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதாக. | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையாளம் காணப்பட்டு செயல்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |